சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–31.08.2021

**சாதாரணக்கூட்டம்**

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் ஆடி மாதம் 25–ஆம் நாள் (ஆகஸ்ட் திங்கள் 09–ஆம் நாள்:–31.08.2021) செவ்வாய்க் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகன எண்.TN60V8239 என்ற டிப்பர் லாரி வாகனத்திற்கு 2021–2022ம் ஆண்டு புதுப்பித்தல் பணி மேற்கொள்ள சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள 06.08.2021ம் அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1. M/s நேஷனல் பாடி பில்டிங் லேபர் ஒர்க்ஸ், சின்னமனூர் – ரூ.1,53,000/–
2. M/s சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், சின்னமனூர் – ரூ.1,48,000/–

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், சின்னமனூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2612/2021/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **344, நாள்.30.08.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் புகைமருந்து அடிக்கும் இயந்திரம் இரண்டு எண்ணம் (Portable Fogging Machine) வாங்கும் பணிக்கு 09.08.2021ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற அனுமதி வேண்டி பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. M/s ஓம் சக்தி டெக் சர்வீஸ், சென்னை – ரூ.72393/– (1 எண்ணம்–GST உட்பட)
2. M/s சக்தி இண்டஸ்ட்ரீஸ், செங்கல்பட்டு – ரூ.73160/– (1 எண்ணம் – GST உட்பட)

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s ஓம் சக்தி டெக் சர்வீஸ், சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2426/2021/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **345 , நாள்.30.08.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.3**

கம்பம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களின் தொலைபேசி செய்தியின்படி, இந்நகராட்சி வார்டு எண்.23,24 மற்றும் 25 ஆகிய பகுதிகளில் கீழ்க்காணும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தொகை ரூ.27.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் விவரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட வைத்தியர் காதர் இஸ்மாயில் தெரு, ஓடைத் தெரு, தெற்கு முஸ்லீம் தெரு, காண்ட்ராக்டர் பழனியாண்டி தெரு, எம்.எம்.ஜி ரைஸ்மில் ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | ரூ.9.50 |
| 2. | இந்நகராட்சிக்குட்பட்ட வைத்தியர் காதர் இஸ்மாயில் தெரு, ஓடைத் தெரு, தெற்கு முஸ்லீம் தெரு, காண்ட்ராக்டர் பழனியாண்டி தெரு, எம்.எம்.ஜி ரைஸ்மில் ஆகிய தெருக்களில் சிறுபாலம் மற்றும் வால்வு பிட் அமைக்கும் பணி | ரூ.3.25 |
| 3. | இந்நகராட்சிக்குட்பட்ட வைத்தியர் காதர் இஸ்மாயில் தெரு, ஓடைத் தெரு, தெற்கு முஸ்லீம் தெருக்களில் சேதமடைந்த பேவர் பிளாக் கல்லை எடுத்து புதியதாக பேவர் பிளாக் கல் அமைக்கும் பணி | ரூ.5.00 |
| 4. | இந்நகராட்சிக்குட்பட்ட காண்ட்ராக்டர் பழனியாண்டி தெரு, எம்.எம்.ஜீ ரைஸ்மில் தெருக்களில் சேதமடைந்த பேவர் பிளாக் கல்லை எடுத்து புதியதாக பேவர் பிளாக் கல் அமைக்கும் பணி | ரூ.10.00 |
| **மொத்தம்** | | **ரூ.27.75** |

அலுவலகக் குறிப்பு:– **பொது மக்களின் நலன் கருதி மேற்காணும் அடிப்படை வசதிகள் பொது நிதி, கம்பம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதி அல்லது வரப்பெறும் ஏதேனும் அரசு திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **346, நாள்.30.08.2021**

**தீர்மானம்**

*******